ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1834/32 - 2013 ඔක්තෝබර් මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.31
*1834/32 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

எனது இலக்கம் : 4/3/1 (நியமனங்கள் - காணி கொள்ளல்).

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 63 (2) அ பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், கீழ்க்காணும் கட்டளையை இத்தால் விதிக்கின்றேன்.

**கட்டளை இல. 2013/4 - நியமனங்களை இரத்துச் செய்தல் :**

2013.03.14 ஆந் திகதிய 1801/27 ஆம் இலக்க, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்ட அதிகாரப் பிரதேசங்களில், நிரல் II இல் காட்டப்பட்ட உத்தியோகத்தர்கள், 2013.03.01 ஆந் திகதி தொடக்கம் 2014.02.28 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்கு காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் காணி எடுத்தற் பணிகளை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட நியமனங்கள், நிரல் III இல் காட்டப்பட்ட திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**அட்டவணை**

| | நிரல் I<br>அதிகாரப் பிரதேசம்<br>நிர்வாக மாவட்டம் | நிரல் II<br>உத்தியோகத்தரின் பெயர் | நிரல் III<br>காலப்பகுதி |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | திரு. ஏ. சிவசுவாமி<br>(இல. நி. சே. வகுப்பு I - ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | 2013.04.25 தொடக்கம் |
| 2. | மட்டக்களப்பு | திரு. எஸ். லோகிதராஜா<br>(இல. நி. சே. - ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | 2013.09.14 தொடக்கம் |
| 3. | கிளிநொச்சி,<br>முல்லைத்தீவு | திரு. வேலுப்பிள்ளை வீரபத்திரப்பிள்ளை<br>(இல. நி. சே. - ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | 2013.06.01 தொடக்கம் |

ஜனக பண்டார தென்னக்கோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013, ஒற்றோபர் 25.

11- 501



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.